# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## கோரிக்கை எண் – 35

## 2016 - 2017

**ஓ. பன்னீர்செல்வம்,**
நிதி, பணியாளர் மற்றும்
நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2016

## பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் | 16 |
| 3 | தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 | 26 |
| 4 | மாநில விழிப்புப் பணி ஆணையம் | 35 |
| 5 | பயிற்சி | 46 |
| 6 | ஆய்வுப் பிரிவு | 80 |
| 7 | அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு | 86 |
| 8 | மாநில புதுமை நிதி திட்டங்கள் 2016–2017 | 89 |
| 9 | முடிவுரை | 90 |

# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை
## 2016–2017 – ஆம் ஆண்டிற்கான
## கொள்கை விளக்கக் குறிப்பு

### 1. முன்னுரை

தமிழ்நாடு அரசு, அரசுத் துறைகளில் மனித வளத்தினை சிறப்பான முறையில் பயன்படுத்திட, திரு. டி.ஏ. வர்கீஸ், ஐ.சி.எஸ். அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், **1976–**ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஆறாம் நாள் பொதுத்துறையிலிருந்து பிரித்தெடுத்து, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை என்ற சிறந்த துறையை உருவாக்கியது. இத்துறை பின்வரும் இரண்டு அலகுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது:–

(i) ப ணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை;

(ii) ப
ணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை.

இத்துறையின் பணிகள் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:—

(அ) அறிவுரை வழங்கும் பணிகள்

(ஆ) சட்டரீதியான பணிகள்

(இ) நிருவாகப் பணிகள்

மனிதவள மேம்பாட்டின் முக்கியமான எல்லாப் பணிகளையும், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை சிறப்பான முறையில் கவனித்து வருகின்றது. இத்துறை, முக்கிய பணிகளான பணியாளர்களை நியமித்தல், பயிற்சியளித்தல், ஊக்குவித்தல், பதவி உயர்வு வழங்குதல், தலைமைச் செயலகம் மற்றும் இதர துறைகளின் பணியாளர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளை கவனித்தல்

ஆகியவற்றில் தனது சிறப்பான பணியினை செயல்படுத்தி வருகிறது.

பணியாளர் மேலாண்மை என்பது மாற்றத்திற்குட்பட்டதாக இருப்பதால் அதை நிகழ்கால தேவைக்கேற்ப தரம் உயர்த்துவது அவசியம். பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பணியாளர் எனும் முக்கிய மூலாதாரத்தைச் செறிவாக்கி, அவர்கள், தத்தம் பணியை சூழல்களுக்கேற்பவும், மாற்றங்களுக்கேற்பவும் செயலாற்றச் செய்கிறது.

இவற்றோடு, தலைமைச் செயலக அலுவல்கள் குறித்த நடவடிக்கைகள், அரசுப் பணியாளர் நலன் ஆகியவற்றில் இத்துறை முக்கியப் பங்காற்றி வருகிறது.

இத்துறை ஆற்றிவரும் பல்வேறு பணிகள் கீழே விரிவாக விளக்கப்பட்டுள்ளன:–

**அ. அறிவுரை வழங்கும் பணிகள்**

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பின்வரும் இனங்களில் தலைமைச் செயலக துறைகளுக்கு அறிவுரை வழங்கும் ஒரு துறையாக விளங்குகிறது:—

i. தமிழ்நாடு மாநிலப் பணிகள், தலைமைச் செயலகப் பணியின் கீழ்வரும் பல்வேறு பணியிடங்களுக்கான காலிப்பணியிட மதிப்பீடு தயார் செய்தல், அப்பணியிடங்களுக்கான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் தயாரித்தல்.

ii. அரசுப் பணியாளர்களின் பணியை வரன்முறைப்படுத்துதல், தகுதிகாண் பருவத்தினை முடித்தல் தொடர்பாக சிறப்பு – பொது ஆகிய விதிகளைத் தளர்த்துவது குறித்த கருத்துருக்களை ஆய்வு செய்தல்.

iii. அடிப்படை விதிகள், விதிக் கூறுகள் ஆகியவற்றிற்கு தெளிவுரைகள் வழங்குதல்.

iv. முதுநிலையைத் திருத்துவது குறித்த கருத்துருக்களை விதிக்கூறுகளின்படி ஆய்வு செய்தல்.

v. வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிக்குச் சமமான கல்வித் தகுதியை அங்கீகரித்தல் குறித்த கருத்துருக்களில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 'இணைக் கல்வி நிர்ணயப் பரிசீலிப்புக் குழுவின்' பரிந்துரையின்பேரில் ஆணை வெளியிடுதல் போன்றவையாகும்.

**ஆ. சட்டரீதியான பணிகள்**

அரசுப் பணியாளர்களின் பணிகள் தொடர்பான பின்வரும் சட்டரீதியான பணி விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவை இத்துறையால் நிருவகிக்கப்படுகின்றன:–

1. மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை அரசுப் பணியாளர்களின் பணிவிதிகள் (அகில இந்தியப் பணிகள் நீங்கலாக):-

   i. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான விதிகள் (பகுதி–I மற்றும் II).

   ii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973.

   iii. தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்.

   iv. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்.

   v. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.

   vi. தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகள்.

vii. தமிழ்நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகள்.

viii. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி சிறப்பு விதிகள் – இனம் XXII.

2. தமிழ்நாடு தலைமைச் செயலகத்திற்கான குறிப்பிட்ட பணி விதிகள்:–

i. தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி சிறப்பு விதிகள்.

ii. தமிழ்நாடு பொதுப்பணி சிறப்பு விதிகள் – இனம் XII மற்றும் XII-A

iii. தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.

3. பிற நிறுவனங்கள் தொடர்பான விதிகள்:–

i. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954.

ii. தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை

(கட்டணம்) விதிகள், 2005.

4. அரசு அலுவல்கள்:–

இத்துறையினால் தலைமைச் செயலக அளவில், தமிழ்நாடு அரசின் அலுவல்கள் குறித்த பின்வரும் விதிகளும் நிருவகிக்கப்படுகின்றன:–

i. தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள், தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள்;

ii. அவ்வப்போது வெளியிடப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்.

**இ. நிருவாகப் பணிகள்**

இத்துறையினால் பின்வரும் நிருவாகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:–

i. தலைமைச் செயலகத்தில் ஓர் அலகு முறையின் கீழ்வரும் (One Unit System) அரசு சார்புச் செயலாளர்களின் பணிநிலை

வரையுள்ள அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு.

ii. பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் கூட்டு மன்றக் கூட்டங்களை நடத்துதல்.

iii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு தகவல் ஆணையம் ஆகியவற்றின் பணியாளர் தொடர்பான நிருவாகப் பணிகள்.

**ஈ. இதரப் பணிகள்**

1. மாநில நிருவாகச் சீர்திருத்தக் குழு மற்றும் மைய அரசு நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

2. பயிற்சியளித்தல்:–

   i. பவானிசாகரிலுள்ள அரசு அலுவலர்

பயிற்சி நிலையத்தில் களப்பணி அளவிலான பணியாளர்களுக்குரிய பயிற்சியும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மூலமாக சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

ii. முதுநிலை / உயர்நிலை அளவிலான அலுவலர்களுக்கு சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சிகள் அளித்தல்.

iii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் புதிதாக நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்குத் தலைமைச் செயலகத்தின் அன்றாட செயல்பாடுகள் குறித்த சிறப்புப் பயிற்சி.

3. இத்துறையின் கட்டுப்பாட்டில் பின்வரும் இயக்குநரகங்கள், அரசமைப்பின் கீழ் செயல்படும் அமைப்புகள், அவை சம்பந்தமான

நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:–

i. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்.

ii. ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்

iii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்.

iv. தமிழ்நாடு தகவல் ஆணையம்.

v. அண்ணா மேலாண்மை நிலையம்.

vi. பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம்.

vii. ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம்.

viii. அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம், சென்னை.

ix. குடிமைப்பணிகள் பயிற்சி மையம், மதுரை மற்றும் கோயம்புத்தூர்.

x. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்.

**4. அரசுப் பணியாளர் நலன்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் ஒட்டு மொத்த நலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை, இந்த அரசு, மிகமுக்கியமெனக் கருதுகிறது. அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பிரச்சினைகளை எதிர் கொள்வதில் இனிமையான, இணக்கமான சூழ்நிலை உருவாகும் என்ற நம்பிக்கையை உறுதி செய்கிறது.

அரசுப் பணியாளர்களுக்கான ஊதியம், பணிவரன்முறை போன்ற கோரிக்கைகள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் குறித்த காலத்தில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

## 5. மின் ஆளுகை

மின் ஆளுகை என்பது அரசு செயல்படுத்தும் அனைத்து திட்டங்களும், நடவடிக்கைகளும் எளிதாகவும், திறமையாகவும், வெளிப்படையான தன்மையுடனும் மக்களுக்கு தகவல் தொழில் நுட்பத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் முறை ஆகும். தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் நிருவகிக்கப்படும் விதிகள் மற்றும் சட்டங்கள் அரசு வலைதளம் 'www.tn.gov.in' இல் வெளியிடப்பட்டு, வெளிப்படையான மற்றும் திறமையான ஆளுகைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்துறையினால் 2007–ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்ட அரசு நிலை ஆணைகளும், இதர முக்கியத்துவம் வாய்ந்த அரசு

ஆணைகளும் மின்னணுத் தொகுப்பில் (Electronic Compendium) தலைமைச் செயலக குறும்பரப்பு வலை தளத்தில் ‘http://parserver1/par/gos/default.htm’ வெளியிடப்பட்டுள்ளன. மின்னணுக் கோப்பு கையாளும் முறையின் கீழ் [Electronic File Processing System (EFPS)], கணினி மயமாக்கப்பட்ட அஞ்சல் பகிர்வு முறை, தன் பதிவேடு பதிவு செய்தல் / கண்காணித்தல் ஆகியவை தலைமைச் செயலகத் துறைகளில் தேசிய தகவலியல் மையத்தின் மூலமாக (NIC) நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. மேலும், இத்தகைய நடைமுறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. பணியாளர் தகவல் முறையில் (Personnel Information System-PINFOSYS) தலைமைச் செயலகத்தில்

பணியாற்றும் அனைத்து துறைகளின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரது பணி தொடர்பான விவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

6. **தற்போது நடைமுறையிலுள்ள அரசின் பல்வேறு சேவைகளை எளிமைப்படுத்துதல்**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால், 07.08.2014 அன்று சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து, அரசுத் துறைகளின் வழியாக மக்களுக்கு ஆற்றும் சேவைகளை விரைவுபடுத்தும் நோக்கோடு, பல்வேறு துறைகளினால் அளிக்கப்படும் 25 சேவைகள் கண்டறியப்படுவதற்கும்,

தொடர்புடைய துறைகளுடன் கலந்து ஆலோசித்து அவற்றை எளிமைப்படுத்தி முறைப்படுத்தவும் பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட 381 ஆலோசனைகள், தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப் பட்டுள்ளன. இதன் தொடர் நடவடிக்கை, ஒவ்வொரு துறையிலும் அமைக்கப்பட்ட மூன்று நபர்கள் குழுவுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகம் சென்னை, பார்க் டவுன், வ.ஊ.சி. நகரில் இயங்கி வருகிறது.

**அ. அமைப்பும் பணிகளும்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தன்னாட்சி அமைப்புடன் தனது பணிகளைச் சுயமாகவும், நேர்மையாகவும், பாகுபாடின்றியும் செயல்படுத்தும் வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுக்கூறு **315(1)**–இன் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், தலைவர் மற்றும் பதினான்கு உறுப்பினர்களைக் கொண்டதாகும். இத்தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணிநிலைகள் **1954**–ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டவையாகும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுக் கூறு **320**–இன்படி கீழ்க்கண்ட

கடமைகள் மற்றும் அலுவலக பணிகளை மேற்கொள்கிறது:–

i. இத்தேர்வாணையம், முதன்மைப் பணியான பணியாளர்களைத் தேர்வு செய்யும் முகமையாகச் செயல்படுதல்.

ii. பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் மற்றும் அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு குறித்த அனைத்து நேர்வுகளிலும் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.

iii. அரசுப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளை நடத்துதல்.

iv. டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளை ஆண்டிற்கு இருமுறை, மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பாக நடத்துதல்.

### ஆ. தேர்வு முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு புதிய சீர்திருத்தங்கள்

இத்தேர்வாணையம் தேர்வு முறைகளில் முழு வெளிப்படைத்தன்மையினை உறுதி செய்திடவும், பணிநியமனம் நியாயமாகவும், நேர்மையாகவும் நடந்திடவும் ஒவ்வொரு கட்டத்திலும் பல்வேறு புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. அவை பின்வருமாறு:—

i. தேர்வாணையம் ஒவ்வொரு ஆண்டும் போட்டித் தேர்வுகளுக்கான நேரடி தேர்வுத்திட்ட

ஆண்டு அட்டவணையை ஆண்டின் தொடக்கத்திலேயே வெளியிடும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் தேர்வுகளுக்கு தங்களை முன்னதாக திட்டமிட்டு தயார் செய்து கொள்ளலாம்.

ii. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அனைத்துத் தேர்வுகளுக்கும், பயன்பாட்டிற்கு எளிதாக உள்ளவாறு இணையதளம் வழியே விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

iii. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனது அடிப்படை விவரங்களை குறைந்த கட்டணத்தில் கையொப்பம் மற்றும் புகைப்படத்துடன் நிரந்தரமாக பதிவு

செய்யும் முறையினை தேர்வாணையம் அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, விண்ணப்பதாரர்கள் தொடர்பான நிரந்தர தரவுதளம் பராமரிக்கப்படுகிறது. இப்பதிவானது ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். பிறகு இதனைப் புதுப்பித்துக்கொள்ளலாம்.

iv. தேர்வுக்கூடங்களில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு அனைத்துத் தேர்வுக்கூடங்கள் / அறைகள் இணைய ஒளிப்பதிவு கருவிகளின் வழியாக கண்காணிக்கப்படுகின்றன.

v. மாற்றுத் திறனாளிகளின் வசதியினை கருத்தில் கொண்டு அனைத்துத் தேர்வுக் கூடங்களிலும் அவர்கள் தரைத் தளத்திலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர்.

மேலும், தேவைப்படின் தேர்வு எழுதுவதற்கு உதவியாளர்களும் நியமிக்கப் படுகின்றனர்.

vi. தொழில்நுட்பப் பதவிகளுக்கு நடத்தப்படும் தேர்வுகள், முறைகேடுகள் ஏதுமின்றி நேர்மையாகவும், விரைவாகவும் நடத்தி, முடிவுகளை வெளியிட தேர்வாணையம் கணினிவழி தேர்வுகளை அறிமுகப் படுத்தியுள்ளது.

vii. தேர்வு முடிவடைந்த பின்னர் கொள்குறி வகையைச் சார்ந்த தேர்வுகளுக்கான தற்காலிக விடைகள் உடனடியாக தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்படும். தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்களுக்கு இவ்விடைகள் குறித்து ஏதேனும் கோரிக்கை அல்லது மறுப்பு இருப்பின் அது குறித்த

கோரிக்கைகளை ஏழு நாட்களுக்குள் தேர்வாணையத்திற்கு தெரிவிக்க கால அவகாசம் அளிக்கப்படுகிறது,

viii. தேர்வு எழுதிய விண்ணப்பதாரர்களின் விரிவான விடை எழுதுதல் தொடர்பான விடைத்தாள் நகலினை தேர்வாணையத்திலேயே பார்வையிட அனுமதி வழங்கப்படுகிறது. இத்தகைய முறை தேர்வாணையத்தின் நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மையினை உறுதிப் படுத்துகிறது.

ix. கடந்த பிப்ரவரி 2012 முதல் தேர்வாணையம், பணி மற்றும் அலகு ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மையினை ஏற்படுத்தும் பொருட்டு கலந்தாய்வு முறையினை அறிமுகப் படுத்தியுள்ளது.

இக்கலந்தாய்வு முறையில் காலிப்பணியிடம் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப் படுகின்றன.

x. துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களுக்கு ஒற்றைச் சாளர முறையினை தேர்வாணையம் அறிமுகப் படுத்தி செயல்படுத்துகிறது.

**இ. சாதனைகள்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஜனவரி 2015 முதல் மார்ச் 2016 வரை, உதவி மருத்துவ அலுவலர் தேர்வு (83 காலிப் பணியிடங்கள்), ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி–I) (74 காலிப் பணியிடங்கள்), ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி–II) (1,241 காலிப் பணியிடங்கள்),

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி–II-அ) (1,863 காலிப் பணியிடங்கள்), கிராம நிருவாக அலுவலர் தேர்வு (813 காலிப் பணியிடங்கள்), உதவிப் புள்ளியியல் ஆய்வாளர் தேர்வு (270 காலிப் பணியிடங்கள்), தாய், சேய் நல அலுவலர் தேர்வு (89 காலிப் பணியிடங்கள்), உதவி வேளாண் அலுவலர் தேர்வு (417 காலிப் பணியிடங்கள்), நெடுஞ்சாலைத் துறை உதவிப் பொறியாளர் (சிவில்) தேர்வு (213 காலிப் பணியிடங்கள்) ஆகிய தேர்வுகளை நடத்தியுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடந்த மே 2011 முதல் 22.08.2016 வரை பல்வேறுத் துறைகளுக்கான 58,553 காலிப் பணியிடங்களுக்கான இறுதி முடிவினை வெளியிட்டுள்ளது.

**ஈ. 2016–2017–ஆம் ஆண்டிற்கான நேரடித் தேர்வுத்திட்ட ஆண்டு அட்டவணை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 29.01.2016 அன்று 2016–2017–ஆம் ஆண்டிற்கான நேரடித் தேர்வுத்திட்ட ஆண்டு அட்டவணையை வெளியிட்டுள்ளது.

**உ. பொது**

மாநில சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்கென ஆண்டறிக்கையை ஆணையம் தயார் செய்கிறது.

**3. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005**

2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் பொது அதிகார அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள தகவலை குடிமக்கள் பெறுவதையும் பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றின் செயற்பாட்டில் வெளிப்படையான தன்மையையும்,

பொறுப்புடைமையை மேம்படுத்துவதையும் மற்றும் ஊழலை தடுத்து நிறுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**அ. சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், விரிவான பலதரப்பட்ட அமைப்புகளுக்கும் பொருந்துவதாக உள்ளது. இச்சட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் அனைத்துத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், உரிய அரசுகளினால் நேரடியாக அல்லது மறைமுகமாக கணிசமான அளவிற்கு நிதியுதவி அளிக்கப்படுகின்ற அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட சொந்தமாக அமைக்கப்பட்ட மற்றும் அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள அல்லது கணிசமான நிதியுதவி அளிக்கப்பட்ட அமைப்புகளுக்கும் பொருந்தும்.

எந்த ஒரு இந்திய குடிமகனும் பொது அதிகார அமைப்பு எதனாலும் அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்து வரப்படுவதுமான தகவல் எவ்வடிவில் இருந்தாலும், அவை தாளிலோ அல்லது மின்னணுப் பதிவு முறையிலோ அல்லது உறுதிச் சான்றளிக்கப்பட்ட மாதிரிகளாகவோ, எந்த வடிவத்தில் இருந்தாலும் அந்த வடிவத்தில் தகவலைப் பெற உரிமையுடையவராவார். மேலும், பணியினை, ஆவணங்களை அல்லது பதிவுருக்களை பார்வையிடவும் செய்யலாம்.

**ஆ. தானாகவே முன்வந்து வெளிப்படுத்துதல்**

தகவல் பெறுவதை எளிதாக்கும் வகையில் பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் அதன் பதிவுருக்கள் அனைத்தையும் உரியவாறு பட்டியல் வரிசைத் தொகுப்பிலிட்டும் அகர வரிசைத் தொகுப்பில் அட்டவணைப்படுத்தியும் வைத்து

வருதல் இச்சட்டத்தின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன் அமைப்பு, செயற்பணிகள், கடமைகள் மற்றும் இதர விவரங்களையும் வெளியிடுதல் வேண்டும்.

**இ. தகவல் பெறும் வழி**

பொது அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் அவற்றின் ஒவ்வொரு அலுவலகத்திலும் அல்லது அதன் ஒவ்வொரு அலகிலும் பொதுத்தகவல் அலுவலர்களை நியமனம் செய்கின்றது. எந்த ஒரு குடிமகனும் தகவல் கோரி சம்பந்தப்பட்ட பொதுத்தகவல் அலுவலருக்கு தனது வேண்டுகோளை சமர்ப்பித்தால் அப்பொதுத் தகவல் அலுவலரால் 30 நாட்களுக்குள் அதற்கான பதில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். இச்சட்டத்தின்படி, தகவலினை வெளியிடுவதிலிருந்து குறிப்பாக விலக்களிக்கப்பட்ட இனங்கள் தவிர்த்து, பிற

இனங்களில், குடிமக்கள் தகவல் பெறலாம். பதில் வழங்கப்படவில்லை என்றாலோ அல்லது விண்ணப்பதாரருக்கு தமக்கு வழங்கப்பட்ட பதிலில் திருப்தியில்லை என்றாலோ உரிய துறையில் குறிப்பிடப்பட்ட மேல்முறையீட்டு அலுவலரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

**ஈ. தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் கட்டமைப்பு**

2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 15(1)–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, தமிழ்நாடு அரசினால், தமிழ்நாடு தகவல் ஆணையம் 07.10.2005 அன்று தோற்றுவிக்கப்பட்டது. ஒரு மாநில தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் ஆறு மாநில தகவல் ஆணையர்களைக் கொண்டு தமிழ்நாடு தகவல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. 2005–ஆம்

ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படி, அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துதல் மற்றும் குறித்தளிக்கப்பட்ட செயற் பணிகளை ஆற்றுதல் ஆகியன ஆணையத்திற்களிக்கப்பட்ட உரிமையாகும். தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை, தேனாம்பேட்டை, தியாகராயர் சாலையில் கதவிலக்கம் எண் 2–இல் உள்ள தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் பணிகளை கவனிக்க ஒரு செயலாளர், ஒரு பதிவாளர், ஒரு சட்ட அலுவலர் மற்றும் இதரபணியாளர்கள் உள்ளனர். 2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 15(4)–இன்படி, மாநில தகவல் ஆணையத்தின் பொதுக் கண்காணிப்பு, மேலாட்சி மற்றும் அலுவல்

மேலாண்மை, மாநில தலைமைத் தகவல் ஆணையரின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும்.

**உ. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறை) விதிகள், 2012**

03.09.2012 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ–III) துறையின் அரசாணை (நிலை) எண் 137–இல் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறை) விதிகள், 2012 அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. அதில், தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடு செய்யப்படும்போது, மனுதாரர்களால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் அவ்வாறு செய்யப்பட்ட மேல்முறையீடுகள் மீது தீர்வு காண்பது குறித்த நடைமுறைகள் ஆகியன அடங்கியுள்ளன.

**ஊ. தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வழங்கப்பட்டுள்ள சிறப்பு வசதிகள்**

காது கேட்கும் திறன் மற்றும் பார்வை குறைபாடு உடையவர்கள், ஆணையத்திற்கு அளிக்கும் எழுத்துப்பூர்வமான வேண்டுகோளின் பேரில் இவ்வாணையத்தின் விசாரணையின்போது அவர்களுக்கு உதவிபுரிய எவர் ஒருவரையும் அழைத்துவர அனுமதிக்கப்படுவர்.

பார்வை குறைபாடு உடையவர்களிடமிருந்து தனிப்பட்ட வகையில் கோரிக்கை பெறப்பட்டால் அவர்களுக்கு, சென்னை, பூந்தமல்லியில் உள்ள பார்வை குறைபாடுடையவர்களுக்கான தேசிய நிறுவனத்தின் மண்டல மையத்தின் உதவியுடன், ஆணையத்தின் முடிவுகள் / ஆணைகளை, பார்வையற்றவர்களுக்கான பிரெய்லி அச்சு எழுத்து முறையில் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இது இந்தியாவிலேயே முதல் முறையாக செய்யப்பட்டுள்ள வசதியாகும்.

**எ. பொது**

இவ்வாணையத்திடம் செய்யப்படும் மேல்முறையீடுகளில் அவர்களது மேல்முறையீடுகள் பெறப்பட்டு அவை பதிவு செய்யப்பட்ட விவரம் குறுந்தகவல் சேவை (SMS) மூலம் பெறும் வசதி இவ்வாணையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேல்முறையீடு அல்லது புகார் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது, வழக்கு விசாரணைகள் பொதுவாக ஆணையத்தின் அலுவலகத்தில் மேற்கொள்ளப் படுகின்றன. இதற்கென வளாகத்தில் மூன்று விசாரணைக் கூடங்கள் உள்ளன. சில சமயங்களில் தொலை தூரங்களில் உள்ள மேல்முறையீட்டாளர்களின் வசதிக்காக வழக்கு விசாரணைகள் மாவட்ட

தலைமையிடங்களில் நடத்தப்படுகின்றன. வழக்கு விசாரணைகளை மேற்கொள்ள காணொளி காட்சி வசதியும் செய்யப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்கென ஆண்டறிக்கையை ஆணையம் தயார் செய்கிறது. ஆணையத்தின் இணையதளத்தில் இவ்வாணையத்திற்கு செய்யப்படும் இரண்டாவது மேல்முறையீடுகள் / புகார்கள் குறித்த வழக்குப் பட்டியல்கள் மற்றும் ஆணையத்தின் முடிவுகள் குறித்த விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

**4. மாநில விழிப்புப் பணி ஆணையம்**

திரு. கே. சந்தானம் அவர்கள் தலைமையிலான ஊழல் தடுப்புக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 1964–ஆம் ஆண்டு பிப்ரவரியில், மைய விழிப்புப் பணி ஆணையம்

மத்திய அரசால் தோற்றுவிக்கப்பட்டது. பொதுப் பணிகளில் நிருவாகரீதியாக ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் அரசுக்கு அறிவுரை வழங்குதல், வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படும் ஊழல் குறித்த தனி இனங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குதல் ஆகியவை இவ்வாணையத்தின் முதன்மையான நோக்கங்களாகும்.

இதனைப் பின்பற்றி, மாநில அரசு **1965–**இல், மாநில விழிப்புப் பணி ஆணையத்தினை ஏற்படுத்தியது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் கடமையாற்றுதலில் உதவிபுரியும் ஒரு முக்கிய அமைப்பாக செயல்படுகிறது.

மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளாவன:—

i. பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டார் அல்லது ஊழல் புரிந்துள்ளார் என சாட்டுரைக்கப்படுகின்ற அல்லது சந்தேகப்படும் வகையில் நடந்துள்ளார் எனில் அவர் மீது விசாரணை மேற்கொள்ளுதல்.

ii. ஒரு பொது ஊழியர் தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காக பயன் படுத்தியதாகவோ அல்லது தனது அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார் மீது விசாரணை/புலனாய்வு மேற்கொள்ளுதல்.

iii. தேவைப்படும் தகவல் மற்றும் புள்ளி விவரங்களை சேகரித்தல்.

iv. தன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட செயல்பாடுகளில் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை, அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்.

**அ. மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் அதிகார வரம்பு**

மாநில விழிப்புப் பணி ஆணையம் பின்வருவனவற்றின்மீது அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது:—

i. தமிழ்நாடு அரசின் அனைத்து பொது / அரசு ஊழியர்கள்.

ii. மாநில அரசின் அனைத்து சட்டபூர்வ அமைப்புகள், கழகங்கள், நிறுவனங்கள்.

iii. பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் உள்ளிட்ட அனைத்துப் பொது ஊழியர்கள்.

மாநில விழிப்புப் பணி ஆணையம் தனது செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கின்றது. இவ்வாண்டறிக்கை அரசால் ஆய்வு செய்யப்பட்டு சட்டப்பேரவை முன் வைக்கப்படுகிறது.

**ஆ. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்**

தமிழ்நாட்டின் பொது நிருவாகத்தில் ஊழல் தடுப்பு நடவடிக்கையினை மேற்கொள்ள, முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் 1964–இல் உருவாக்கப்பட்டது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் மாநில விழிப்புப்பணி

ஆணையத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் கடமையாற்றுதலில் உதவிபுரியும் ஒரு முக்கிய அமைப்பாக செயல்படுகிறது. இவ்வியக்குநரகத்தின் முக்கிய செயல்பாடுகளாவன:

i. மாநில விழிப்புப்பணி ஆணையத்தின் உத்தரவின் பேரில் ஊழல் குற்றச்சாட்டுகள், அதன் தொடர்பான நடத்தைகள் ஆகியவற்றின் மீது விசாரணை மேற்கொள்ளுதல்.

ii குறிப்பிட்ட புகார்களின் பேரில், கையூட்டு பெறும் பொதுப்பணியாளர் மீது உரிய முறைகளைப் பின்பற்றி தகுந்த நடவடிக்கை எடுத்தல்.

iii பொதுமக்களிடம் இருந்து பொதுப் பணியாளர்கள் குறித்து பெறப்படும் ஊழல் தொடர்பான புகார்களின் மீது விசாரணை மேற்கொள்ளுதல்.

iv. லஞ்ச ஊழல் முறைகேடுகளை கண்டறிவதற்காக நுண்ணறிவுத்

தகவல்கள் சேகரித்து ஊழல் தடுப்பு சட்டம் **1988–**இன் கீழ் அமையும் குற்றங்களை புலனாய்வு செய்தல்.

v. இவ்வியக்குநரகத்தால் சேகரிக்கப்படும் தகவல்களையும் புள்ளிவிவரங்களையும் மாநில விழிப்புப்பணி ஆணையத்திற்கு தெரியப்படுத்துதல்.

கையூட்டு கேட்டு பிடிபடும் பொதுப் பணியாளர்கள் தகுந்த ஒழுங்கு நடவடிக்கை அலுவலரால் உடனடியாக தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்படுவர். இத்தகைய கடுமையான நடவடிக்கை மற்ற பொதுப்பணியாளர்கள் தமது பணிகளில் நேர்மையாக செயல்படுவதற்கு வழிவகுக்கும்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்துத் துறை தலைவர்கள், உள்ளாட்சி அமைப்பு மற்றும் அரசு பொது நிறுவனங்கள் கீழ்க்காணும் தகவலை தங்கள் அலுவலகத்தின் தகவல்

பலகையில் பார்வையில் படுமாறு வைக்க வேண்டும் என்றும் இதனை இணையதளத்தில் வெளியிடவேண்டும் என்றும் அரசு அறிவுறுத்தியுள்ளது:

**"லஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் குற்றம்"**

ஊழல் தொடர்பான புகார்களை

**இயக்குநர்,**
**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,**
**சென்னை–16**

என்ற முகவரிக்கு அனுப்பும்படி தெரிவிக்கப்படுகிறது".

**இணையதள முகவரி : www.dvac.tn.gov.in**

**தொலைபேசி எண் : 22310989 / 22321090 / 22321085**

அனைத்துத்துறை தலைவர்களும் தங்களது துறையில் இரண்டாம் நிலை அதிகாரத்தில் உள்ள அலுவலர்களை கண்காணிப்பு அலுவலராக நியமித்து ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும்

அவர்களது துறை அலுவலர்கள் மீது விசாரணை நடத்தவும் அரசு அறிவுறுத்தியுள்ளது. மேலும், உரிய கால இடைவெளியில் துறையின் கண்காணிப்பு அலுவலர்கள் தங்களது அலுவலகத்தில் சந்தேகத்திற்குரிய இடங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்த இயக்குநரகத்தின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தெரியப்படுத்தவும் ஆண்டு தோறும் சென்னை தீவுத்திடலில் நடைபெறும் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் சார்பாக அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது. ஊழலுக்கு எதிராக தகவல் பலகைகள், பாடல்கள், வீடியோ காட்சிகள் ஒளிபரப்புதல், பொது மக்களை உறுதிமொழி ஏற்க

வைத்தல் ஆகிய செயல்பாடுகள் நடைபெறுகின்றன. உயர் அலுவலர்கள், அவ்வளாகத்தில் சுழற்சி முறையில் வருகை தந்து இயக்குநரகத்தின் செயல்பாடுகளை பார்வையாளர்களுக்கு விவரிக்கின்றனர்.

**இ. ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்**

மாநில அரசிலும், நகராட்சி நிருவாக அமைப்புகளிலும் பணிபுரியும் அலுவலர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயம்) விதிகள் 1955 மற்றும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் அடிப்படையில் துறைரீதியாக விசாரணை நடத்த ஏற்படுத்தப்பட்ட அமைப்பே ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயமாகும். இத்தீர்ப்பாயத்திடம் அனுப்பப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்த நேர்வுகள் மீதான

விசாரணையின் பொருட்டு தேவைப்படும் சாட்சியங்களை விசாரிக்கவும், தொடர்புடைய ஆவணங்களைக் கோரவும் அதிகாரங்களை பெற்ற நீதிமுறை சார்புடைய அமைப்பாகும்.

தற்போது சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய நகரங்களில் ஆறு ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் / மாவட்ட வருவாய் அலுவலர்கள் தலைமையில் ஒழுங்கு நடவடிக்கை ஆணையராகச் செயல்படும் இத்தீர்ப்பாயங்களில் அதன் விசாரணைக்கு உதவ சட்ட நடவடிக்கை தொடர்புடைய வழக்கறிஞர்கள் (Prosecutors for Disciplinary Proceedings) நியமிக்கப்பட்டுள்ளனர். குற்றச்சாட்டுகள் மீதான தீர்ப்பாணை / விசாரணை அறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலர் தொடர்புடைய

அரசு நிருவாகத்துறைக்கு ஒழுங்கு நடவடிக்கை ஆணையரால் அனுப்பப்படும். அவ்வறிக்கையினை ஆய்வு செய்து ஒவ்வொரு ஒழுங்கு நடவடிக்கையின் தன்மைக்கு ஏற்ப உரிய ஆணைகளை அரசு பிறப்பிக்கும்.

**5. பயிற்சி**

மனித ஆற்றலே அனைத்து ஆற்றல்களிலும் மிக முக்கியம் வாய்ந்ததாகும். முறைப்படுத்தப்பட்ட பயிற்சி என்பது மனித ஆற்றல் மேம்பாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக கடந்த ஆண்டுகளில் மாறிவிட்டது. நிருவாகம் மேம்பட, அரசு பணியாளர்களின் செயல்திறன் மற்றும் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பொதுப்பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் ஐந்து பயிற்சி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

**அ. தலைமைச் செயலக பயிற்சி நிலையம்**

இப்பயிற்சி நிலையத்தில், தலைமைச் செயலக துறைகளில் நேரடி நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோருக்கு பொது நிருவாக விதிமுறைகள், நிதி நிருவாக விதிமுறைகள் குறித்து 30 வேலை நாட்கள் கொண்ட அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகிறது. இது வரை 90 அணிகளுக்கு

தலைமைச் செயலக பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2016–2017 மற்றும் 2017–2018–ஆம் ஆண்டுகளில் தலைமைச் செயலகத்திலுள்ள 1,300 உதவிப் பிரிவு அலுவலர்களுக்கு அவர்களின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு விதிகள் மற்றும் ஒழுங்குமுறை நெறிகள் குறித்து ஒரு ‘புத்தாக்கப் பயிற்சி’ இந்நிலையத்தின் மூலம் அளிக்க உத்தேசிக்கப்பட்டு, 26 அணிகளில் ஒவ்வொரு அணியிலும் 50 உதவிப் பிரிவு அலுவலர் வீதம் பயிற்சியளிக்கும் வகையில் மே 2016 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**ஆ. அண்ணா மேலாண்மை நிலையம்**

அண்ணா மேலாண்மை நிலையம் தமிழக அரசின் மாநில நிருவாகப் பயிற்சி நிறுவனமாக

செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் அமைச்சுப் பணியாளர்கள் முதல் அகில இந்தியப் பணி அதிகாரிகள் வரை அனைத்துத் தரப்பு அரசு ஊழியர்களுக்கும் பயிற்சி தரும் முதன்மை பயிற்சி நிறுவனமாக விளங்குகிறது.

2015–2016–ஆம் ஆண்டில் 31.03.2016 முடிய அண்ணா மேலாண்மை நிலையம் 595 பயிற்சி நிகழ்ச்சிகளில் 21,143 அலுவலர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய மண்டல மையங்கள் மூலம் அளிக்கப்பட்ட பயிற்சிகளும் இதில் அடங்கும்.

இந்நிலையம், பொது மேலாண்மை குறித்த பயிற்சிகளுடன் சிறப்பு பயிற்சிகளான பேரிடர் மேலாண்மை, மின் ஆளுகை மற்றும் தகவல் தொழில் நுட்பம், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கூறுகள்,

ஒட்டு மொத்த தர மேலாண்மை, சுகாதாரம் மற்றும் மருத்துவமனை நிருவாகம் போன்ற சிறப்பு பயிற்சிகளை அதிகமாக நடத்தி வருகிறது. மேலும், தேவை அடிப்படையிலான பயிற்சி வகுப்புகள் / பயிற்சி பட்டறைகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித்துறை, குற்ற வழக்கு தொடர்வுத் துறை, வணிகவரித் துறை, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் மத்திய அரசின் வணிக மற்றும் தொழில் அமைச்சகம் மற்றும் நகர்ப்புற போக்குவரத்து நிறுவனம் போன்ற பல்வேறு துறைகளின் அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையம் தன்னாட்சியுடனும், சுயச்சார்புடனும் விளங்க இதன் நிதிச் சார்பான கொள்கை

முடிவுகளை ஆட்சி மன்றக்குழு எடுத்துவருகிறது. இந்நிலையத்தின் ஆட்சி மன்றக்குழு, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பொறுப்பு வகிக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படுகிறது. இக்குழு, பயிற்சிப் பொருண்மைகளை வலுவாக்கும் பொருட்டு, துணைத் தலைவராக அரசுத் தலைமைச் செயலாளரையும், பயிற்சி, கல்வி ஆகியவற்றில் அனுபவம் வாய்ந்த பிற அலுவலர்களையும் மேலாண்மை தொடர்புடைய வல்லுநர்களையும் உறுப்பினர்களாக கொண்டு செயல்படுகிறது.

பயிற்சி நிகழ்வுகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில் நிலையத்தின் கட்டமைப்பு உயர்த்தப்பட்டு அது தற்போது இயங்கி வரும் 'மகிழம்பூ' கட்டடம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், 25.05.2005 அன்று திறந்து வைக்கப்பட்டது.

1. **2015–2016–**ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சிறப்பு பயிற்சிகள்:

   i. தமிழ்நாடு சுகாதாரமுறைத் திட்டத்தின் ஆதரவோடு **2008–2009–**ஆம் ஆண்டு முதல் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையின் முதுநிலை மருத்துவ அலுவலர்களுக்கான ''மருத்துவ நிருவாகம்'' என்கிற தலைப்பில் **12** நாட்கள் வழங்கப்படும் பயிற்சி அண்ணா மேலாண்மை நிலையத்தால் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் மூலமாக, தமிழக அரசின் பாராட்டு இந்நிலையத்திற்கு வழங்கப்பட்டது.

   ii. மைய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையின் நிதி உதவியுடன் **2014–**ஆம் ஆண்டில் **27** இந்திய வனப்பணி அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கு

கிடைக்கப் பெற்ற வரவேற்பின் அடிப்படையில் **2015–2016**–ஆம் ஆண்டிலும் இதே பயிற்சியினை அளித்திட மத்திய அரசினால் நிதி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து **18.01.2016** முதல் **22.01.2016** வரை **24** இந்திய வனப்பணி அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

iii. ‘முனைப்புப் பயிற்சித் திட்டம் – அனைவருக்கும் பயிற்சி’ என்ற திட்டத்தின்கீழ் **2013**–ஆம் ஆண்டில் மைய அரசால் ரூ.**3.00** கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்நிதியின் மூலம் ஆளுமை மேம்பாடு, மனோபாவ மாற்றம், விதிகள் மற்றும் கட்டுப்பாடு, கணினிப் பயிற்சி ஆகிய பல்வேறு தலைப்புகளில், **31.03.2016** வரை **223** பயிற்சி வகுப்புகளில் **5,775** அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

iv. ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுவது போல் **6** நேரடி நியமன பயிற்சி துணை ஆட்சியர்களுக்கு முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பயிற்சி **2015–2016**–ஆம் ஆண்டிலும் அளிக்கப்பட்டது.

v. மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் நிதி உதவியுடன், இந்நிலையம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கோட்பாடுகளை தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பரப்புவதற்கான ஒரு சிறப்பு திட்டத்தை அமல்படுத்தி வருகிறது. **31.03.2016** முடிய **13** பயிற்சிகள் நடத்தப்பட்டு அதில் கலந்து கொண்ட **629** அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. எஞ்சிய பயிற்சிகள் **2016–2017**–ஆம் ஆண்டில் தொடர்ந்து நடத்தப்பட இருக்கின்றன.

vi. **2011–**ஆம் ஆண்டு தொகுப்பில் இருந்து, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட **9** இந்திய ஆட்சிப்பணி பயிற்சி அலுவலர்களின் (தகுதிகாண் பருவத்தினர்) பணித்திறனை அதிகரிக்கும் வகையில், ஒரு மாத கால பணியறிமுகப் பயிற்சி நடத்தப்பட்டது. மாவட்ட பயிற்சிக்குச் செல்வதற்கு முன்பு பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் குறித்து முழுமையான விவரங்கள் கிடைத்ததால் பயிற்சியாளர்கள் இந்த பயிற்சியினை வெகுவாக விரும்பினார்கள். **2012, 2013, 2014** மற்றும் **2015–**ஆம் ஆண்டு தொகுப்பினைச் சார்ந்த அலுவலர்களுக்கும் இப்பயிற்சி தொடர்ந்து நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

vii. தமிழ்நாடு அரசு வெளியிட்ட வருவாய்த்துறையின் அரசாணை (நிலை) எண் **404,** நாள் **11.10.2013** மூலம்

வருவாய் உதவியாளர்கள், துணை வட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை ஆட்சியர்கள் ஆகியோருக்கு ‘பேரிடர் மேலாண்மை’ குறித்த பயிற்சி இந்நிலையம் மூலமாக அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டது. 2014–2015 மற்றும் 2015–2016–ஆம் ஆண்டில் இப்பயிற்சி பல மாவட்டங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

viii. மக்களுடன் நேரடித் தொடர்புள்ள பணியாளர்களுக்கான அறிமுகப் பயிற்சியினை 2014–2015–ஆம் ஆண்டில் மத்திய அரசின் பணியாளர் மற்றும் பயிற்சித் துறை தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய மூன்று மாநிலங்களில் தலா ஐந்து மாவட்டங்கள் என முன்னோடித் திட்டமாக நடத்துவதற்கு தேர்வு செய்தது. இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு வாரகால

அளவிலான ஐந்து பயிற்சிகள் நடத்தப்பட்டன. மக்களுடன் நேரடித் தொடர்புள்ள பணியாளர்களின் பொதுவான ஆளுமைத்திறன் மனப்பாங்கு ஆகியவை குறித்த பொதுவான திறன்களையும், துறை சார்ந்த குறிப்பிட்ட திறன்களையும், ஆளுமையையும் மேம்படுத்தி பொது சேவையின் தரத்தை உயர்த்துவதே இவ்வறிமுகப் பயிற்சியின் நோக்கமாகும். தமிழ்நாட்டில் இப்பயிற்சி திட்டம் அண்ணா மேலாண்மை நிலையத்தால் செயலாக்கப்பட்டது. முதல் பயிற்சி நிகழ்ச்சி 05.01.2015 அன்று சென்னையில் துவக்கப்பட்டது. இம்முன்னோடி திட்டத்திற்காக மைய அரசு ரூ.1.80 கோடி சிறப்பு மானிய உதவியினை அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு வழங்கியுள்ளது. அண்ணா மேலாண்மை நிலையம் 25 அணிகளாக அனைத்து

பயிற்சிகளையும் நடத்தி முடித்ததோடு, இம்முன்னோடி திட்டத்தில் **1,000** அரசு பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்ற இலக்கினையும் விஞ்சி **1,127** அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் **2015–2016**–ஆம் ஆண்டில் தேர்ந்து எடுக்கப்பட்ட **5** மாவட்டங்களில் (கன்னியாகுமரி, தருமபுரி, மதுரை, சேலம் மற்றும் திருச்சி) **350** அலுவலர்களுக்கு **12** நாட்கள் கொண்ட பயிற்சியை வழங்க மைய அரசு ரூ.**63.00** இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கியது. இதன் முதல் பயிற்சி **26.10.2015**–இல் தொடங்கப்பட்டு **31.03.2016** வரையில் **8** பயிற்சிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

ix. பொதுத்தேர்தல் – **2016** பணிகளில் ஈடுபட்ட மாநில அளவிலான முதன்மை பயிற்றுநர்களுக்கு **2015**–ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இரண்டு நாட்கள்

கொண்ட பயிற்சி நடத்தப்பட்டது. மேலும், மைய அரசின் பயிற்றுநர்கள் மூலம், மாநில தேர்தல் அதிகாரிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாவட்ட துணைத் தேர்தல் அதிகாரிகள், காவல் துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் துறை ஆணையர்களுக்கும் நான்கு நாட்கள் 'சிறப்பு பயிற்சி' இந்நிலையத்தில் ஜனவரி 2016–இல் நடத்தப்பட்டது.

x. 'நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு பெற உரிமை மற்றும் வெளிப்படைத்தன்மை, புனர்வாழ்வு மற்றும் மீளகுடியேற்ற சட்டம் 2013' என்னும் தலைப்பில் நில நிருவாகத் துறையின் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோருக்காக மூன்று பயிற்சிகள் இவ்வாண்டில் நடத்தப்பட்டன.

xi. மத்திய கலால் மற்றும் சுங்கத்துறையைச் சார்ந்த கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவி ஆணையர்களுக்கு ‘தலைமைப் பண்புகள் மற்றும் அலுவலக நடைமுறைகள்’ என்ற தலைப்புகளில் முறையே பயிற்சி அளிக்கப்பட்டது.

xii. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பணியாளர்களுக்கு ‘அலுவலக நடைமுறைகள்’ என்ற தலைப்பில் மூன்று நாட்கள் கொண்ட பயிற்சி கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது.

xiii. **2015–2016–**இல் முதன் முறையாக ‘Microsoft Corporation இந்தியா பிரைவேட் லிமிடெட்’ என்ற தனியார் நிறுவனத்துடன் சேர்ந்து தமிழக அரசின் அரசு செயலாளர் நிலையிலான அலுவலர்களுக்கு ‘தகவல் தொழில் நுட்பத்துறையில் உற்பத்தித் திறன் அதிகரிப்புக்கான தொழில்நுட்ப பட்டறை’ நடத்தப்பட்டது.

xiv. பட்டு வளர்ச்சித்துறை அலுவலர்களுக்கு முதன்முறையாக ‘அலுவலக நடைமுறைகள்’ என்னும் தலைப்பில் பயிற்சி நடத்தப்பட்டது.

xv. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து நகராட்சி அலுவலர்களுக்கு ‘மேலாண்மை தகவல் அமைப்பு’ குறித்த ஒரு சிறப்பு பட்டறை நடத்தப்பட்டது.

xvi. முதன் முறையாக மத்திய அரசின் கீழ் இயங்கும் சென்னையை சார்ந்த உணவக மேலாண்மை பயிற்சி நிலையத்தின் பேராசிரியர்களுக்கு ‘மேலாண்மை கொள்கைகள் மற்றும் பணிகள்’ என்னும் தலைப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி உணவக மேலாண்மை பயிற்சி நிலையத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்டது.

xvii. சென்னை மாநகராட்சியின் உதவி கல்வி அலுவலர்களுக்கு 'அலுவலக நடைமுறைகள்' குறித்த பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சி சென்னை மாநகராட்சியின் நிதி ஆதரவுடன் நடத்தப்பட்டது.

xviii. சென்னை மாநகராட்சியின் மூலம் மாநகராட்சி அலுவலர்களுக்கு 'மன அழுத்த நீக்க மேலாண்மை' பயிற்சி (stress management) அளிக்கப்பட்டது.

xix. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக துணை ஆட்சியர்களுக்கு 'கொத்தடிமை முறை ஒழிப்பு சட்டம்' (Abolition of Bonded Labour Act) குறித்த பட்டறைகள் மூன்று அணிகளாக நடத்தப்பட்டது.

xx. சென்னை மாநகராட்சியை சேர்ந்த பற்றாளர்களுக்கு (Nodal Officers) 'தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005'

குறித்த பயிற்சி வகுப்புகள் நிலையத்தால் தனியாக நடத்தப்பட்டது.

xxi. நிதி மேலாண்மை மற்றும் கணக்கியல், நவீன சேமிப்பு செயல்முறைகள், தானிய சேமிப்பு மற்றும் பராமரிப்பு, பூச்சி மற்றும் கரையான் போன்றவைகளால் ஏற்படும் சேதத்தை கட்டுப்படுத்துவது, உணவு தானியங்கள் தரம் மேம்பாடு, பொது நிருவாகம் மற்றும் கட்டுமான மேலாண்மை என்ற தலைப்புகளில் தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகத்தை சார்ந்த பணியாளர்களுக்கு 8 தனிச் சிறப்புடைய பயிற்சிகள் நிலையத்தால் அளிக்கப்பட்டன.

**2. மண்டல பயிற்சி நிலையங்கள்**

மதுரை, திருச்சி மற்றும் சேலம் மையங்களில் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டதிலிருந்து, குறைந்தபட்சம் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒரு பயிற்சி என்ற அளவில் அனைத்து

மாவட்டங்களிலும் பயிற்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்டத்தில் இயங்கும் பிற துறைகளை சார்ந்த அலுவலர்கள், அதிகாரிகள் தத்தம் மாவட்டத்திலேயே பயிற்சி பெற்று பயனடைந்து வருகின்றனர். **2015–2016–**ஆம் ஆண்டில் **31.03.2016** முடிய **168** பயிற்சிகளின் மூலம் **8,685** அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இந்த மண்டல பயிற்சி நிலையங்கள் மூலம் இந்நிலையம் தனது பயிற்சி திட்டங்களை மாவட்ட ஆட்சியர்களின் ஒத்துழைப்போடு மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டித்துள்ளது.

**இ. ‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம்**

‘அ’ மற்றும் ‘ஆ’ பிரிவு அலுவலர்களுக்கான (A & B Group Officers) அடிப்படைப் பயிற்சி

நிலையம் 'மகிழம்பூ' வளாகத்திற்கு அருகில் இருக்கும் 'காஞ்சி' வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் நேரிடையாகவும், பதவி உயர்வின் மூலமாகவும் பணியமர்த்தப்பட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு 'அ' மற்றும் 'ஆ' பாடப் பிரிவுகளில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2015–2016–ஆம் ஆண்டில் 15 அணிகளில் 409 அலுவலர்கள் பயிற்சியை முடித்துள்ளனர்.

**ஈ. அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம்**

பட்டியலினத்தைச் சார்ந்த தேர்வர்களுக்காக, குடிமைப் பணித் தேர்வுகளுக்கு பயிற்சியளிக்க முன்தேர்வு பயிற்சி மையம் 1966–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதைப் போன்றே பிற்படுத்தப்பட்ட – மிகவும் பிற்படுத்தப்பட்ட

இனத்தைச் சார்ந்த தேர்வர்களை வழி நடத்துவதற்காக சிறப்புப் பயிற்சி மையம் 1971–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்விரண்டு மையங்களும் ஒன்றிணைக்கப்பட்டு '**அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம்**' என்று பெயரிடப்பட்டு 2000–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பயிற்சித் துறைத் தலைவர் அவர்களின் நிருவாக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

இங்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு கட்டணமின்றி உண்டி, உறையுள் வசதி அளிக்கப்படுகிறது. அரசாணை (நிலை) எண் 123, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–III) துறை, நாள் 15.10.2013 மூலம், மாணவ / மாணவியர்களின் பெற்றோரது ஆண்டு

வருமானத்தைக் கணக்கில் கொள்ளாது, அதற்கான வரம்பினை நீக்கி அவர்களிடம் உணவுக் கட்டணம் வசூலிப்பதை முழுவதுமாக கைவிடுமாறு அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் இச்சலுகையைப் பெறுவதற்காக பயிற்சியாளர்களது பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000/– ஆக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை அரசால் நீக்கப்பட்டு, சமூக நீதி முழுமையாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

1. **முதல் நிலைத் தேர்வுக்கான பயிற்சி (Preliminary Examination)**

ஒவ்வோர் ஆண்டும் நுழைவுத் தேர்வின் மூலம் முதல் நிலைத் தேர்வு பயிற்சிக்கு தகுதிவாய்ந்த மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். 2015–ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வின் மூலம் மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்படும் 2016–ஆம் ஆண்டு, முதல் நிலைத் தேர்வுக்கான

பயிற்சி அளிக்க 325 பயிற்சியாளர்கள் (225 – முழுநேரம் தங்கிப்பயிலும் பயிற்சியாளர்கள் + 100–பகுதி நேரப் பயிற்சியாளர்கள்) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். அரசாணை (நிலை) எண் 149, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–III) துறை, நாள் 19.12.2013–இல் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை 200–இல் இருந்து 225 ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, உண்டி, உறையுள் வசதி அதிகரிக்கப்பட்டிருப்பதே இந்தக் கூடுதல் சேர்க்கைக்கு வழிவகுத்துள்ளது. 2011–2012–ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்ட ஆட்சியரக அலுவலகங்கள் மூலமாக நுழைவுத் தேர்வுக்கான அறிவுசார் எழுத்து வாசிப்பு (ICR Intelligence Character Reader) விண்ணப்பங்கள்

மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந்நுழைவுத் தேர்வுக்கு 2015–ஆம் ஆண்டு 8,914 நபர்கள் விண்ணப்பித்தார்கள். அவர்களில் 5,078 பேர் தேர்வை எதிர்கொண்டார்கள்.

சேர்க்கைக்கான இடஒதுக்கீடு பின்வருமாறு:

| இனம் | முழு நேரம் | பகுதி நேரம் |
|---|---|---|
| ஆதி திராவிடர் | 92 | 41 |
| அருந்ததியர் | 18 | 08 |
| பழங்குடியினர் | 03 | 01 |
| மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 40 | 18 |
| பிற்படுத்தப்பட்டோர் | 54 | 24 |
| பிற்படுத்தப்பட்டோர் – (முஸ்லீம்) | 07 | 03 |
| மாற்றுத் திறனாளிகள் | 07 | 03 |
| இதர வகுப்பினர் | 04 | 02 |
| **மொத்தம்** | **225** | **100** |

**2.**

**தன்மைத் தேர்வு பயிற்சி**
**(Main Examination)**

ஒவ்வோர் ஆண்டும் முதல் நிலை தேர்வு முடிவுகள் வரப்பெற்றவுடன், வெற்றி பெற்றவர்களுக்கு முதன்மைத் தேர்வினை எதிர்கொள்ளும் பொருட்டு சுமார் மூன்று மாத கால தீவிர பயிற்சி (அக்டோபர் முதல் டிசம்பர் வரை) அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மையத்தில் பயின்று வெற்றி பெற்ற மாணவர்கள் அல்லாமல் இதர மாணவர்களும் பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெறுகின்றனர். 2015–2016–ஆம் ஆண்டில் 225 மாணவ/ மாணவியர்களுக்கு குடிமைப்பணித் தேர்வில் முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது. 2015–ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து அகில

இந்திய குடிமைப் பணிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 82 தேர்வர்களில் **42** தேர்வர்கள் இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றவர்கள் ஆவர். முதன்மைத் தேர்வுக்கு பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் வருமான உச்ச வரம்பின்றி மாதம் ரூ.**3,000/–** உதவித் தொகை, படிக்கும் தகவல்களைத் திரட்டும் பொருட்டு வழங்கப்படுகிறது.

3. **மாதிரி ஆளுமைத் தேர்வு**

முதன்மைத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு இந்நிலையம் மாதிரி ஆளுமைத் தேர்வை நடத்தி வருகிறது. புது தில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வுக்கு வெகுநாட்கள் முன்னதாக இது நடத்தப்படுகிறது. மேலும், புது தில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வினை எளிதில் எதிர்கொள்ள தமிழ்நாடு இல்லத்தில் சலுகைக்

கட்டணத்தில் தங்கும் வசதி தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு இடைநிகழ்வுச் செலவிற்கு ரூ.2,000/– வழங்கப்படுகிறது.

4. **பயிற்சி ஆசிரியர்கள்**

இப்பயிற்சி மையத்தில் ஒரு முதல்வர், இரண்டு முழு நேரப் பேராசிரியர்கள் தவிர, 20–க்கும் அதிகமான அழைப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு 23–க்கும் மேற்பட்ட பாடப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மையத்தில் சுமார் 21,000 புத்தகங்கள் கொண்ட நூலகமும், கணினி வசதிகளும் உள்ளன. நடப்பு நிகழ்வுகளில் பயிற்சியாளர்கள் நுணுக்கங்களை நன்கு அறிந்து திறனை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு வாசிப்பு அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

5. **அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையத்தின் புதிய கட்டடம்**

இப்பயிற்சி மையம் இதற்கு முன்பாக 1984–ஆம் ஆண்டு முதல் சென்னை, அண்ணா நகரில் உள்ள தமிழ் நாடு வீட்டு வசதி வாரிய கட்டடத்தில், வாடகை கட்டடத்தில் இயங்கி வந்தது. முப்பது ஆண்டு கால பழமையான இக்கட்டடத்தில் பயிற்சியாளர்கள் குறைந்த வசதிகளுடன் பயிற்சி பெற்று வந்தனர்.

மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தற்போது நிலவிவரும் கடுமையான போட்டிகளை எதிர்கொள்ளும் வகையிலும், நவீன வசதிகள் கொண்ட ஒரு புதிய பயிற்சி மையம் ஒன்பது மாத காலத்தில் அண்ணா மேலாண்மை நிலையத்தின் அருகிலுள்ள ‘காஞ்சி’ வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டடம் ரூ.1014.00 இலட்சம்

மதிப்பீட்டில் **50,843** சதுர அடியில் மூன்று தளங்களுடன் அமைந்துள்ளது. மேலும், இக்கட்டடம் குளிர் சாதன வசதியுடன் கூடிய வகுப்பறை, கூட்ட அரங்கு, கணினி அறை, நூலகம், நவீன சமையல் கூடம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. அறைகலன்களுடன் கூடிய தங்கும் வசதி **225** மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் **12.10.2012** அன்று திறந்து வைத்தார்கள்.

6. **குடிமைப்பணிகள் பயிற்சி மையம் – மதுரை, கோயம்புத்தூர்**

சென்னையில் உள்ள அகில இந்திய குடிமைப்பணிகள் பயிற்சி மையத்தை போன்று இந்திய ஆட்சிப்பணிகள் / இந்திய காவல் பணிகளில் சேர விரும்பும் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்க, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை

மற்றும் பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் கிராமப்புற மாணவர்களின் நலன்களை கருத்தில் கொண்டு, ‘அண்ணா நூற்றாண்டு குடிமைப்பணிகள் பயிற்சி மையம்’ என்ற பெயரில் புதியதாக இரண்டு பயிற்சி மையங்கள் அரசால் தொடங்கப்பட்டது. இப்பயிற்சி மையங்களில் மத்திய தேர்வாணையத்தின் குடிமைப் பணிகளுக்கான முதல்நிலைத் தேர்விற்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**உ. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்**

தமிழக அரசின் அனைத்துத் துறைகளில் உள்ள இளநிலை உதவியாளர்களுக்கும் / உதவியாளர்களுக்கும் அடிப்படைப் பயிற்சியை வழங்கும் பொருட்டு பவானிசாகரில் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் 1974–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இந்நிலையம் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள முதல்வரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. அது தவிர ஐந்து துணை ஆட்சியர்கள், கருவூலம் மற்றும் கணக்குத் துறையைச் சார்ந்த ஐந்து கணக்கு அலுவலர்கள், ஊரக வளர்ச்சி துறையைச் சார்ந்த இரண்டு உதவி இயக்குநர்கள் ஆகியோர் இந்நிலையத்தில் பயிற்சியளிக்க விரிவுரையாளர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர். கணினி பாடத்தில் பயிற்சியளிக்க கணினி விரிவுரையாளர் மற்றும் பகுப்பாய்வர் பணியிடம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையைச் சார்ந்த ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணி மாறுதல் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு பயிற்சியாளர்களுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு பயிற்சி அளித்து வருகிறார்.

1. பயிற்சி நிகழ்வுகள்

   i. இந்நிலையம் துவங்கப்பட்ட காலத்திலிருந்து இதுவரை வெவ்வேறு பிரிவுகளில் 1,05,573 அலுவலர்களுக்கு பயிற்சியளித்துள்ளது.

   ii. நிலுவையிலுள்ள பயிற்சி பெறவேண்டியவர்களின் எண்ணிக்கைளைக் குறைக்கும் நோக்கோடு அடிப்படைப் பயிற்சியானது, குறுகிய காலப் பயிற்சியாக 41 நாட்களுக்கு நிலையத்திலேயே வழங்க அரசாணை (நிலை) எண் 94, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–I) துறை, நாள் 26.07.2013–இன் மூலம் அரசு ஆணையிட்டது. அதன்படி, அடிப்படைப் பயிற்சி குறுகிய காலப் பயிற்சியாக 2013–ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நடத்தப்பட்டு வருகிறது.

31.05.2016 வரை 18 அணிகளில் 7,026 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

iii. அரசாணை (நிலை) எண் 120, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (பயிற்சி–I) துறை, நாள் 19.11.2014–இன்படி, கோவை, திருச்சி, வேலூர் மற்றும் சேலம் ஆகிய நான்கு காவலர் பயிற்சி பள்ளிகளில் 02.01.2016 வரையிலும் 37 நாட்கள் கொண்ட சிறப்பு சுருக்கப்பட்ட பயிற்சிகள் 31 அணிகளில் மொத்தம் 7,280 இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

iv. ஆக மொத்தம் இரண்டு குறுகியகால அடிப்படைப் பயிற்சிகளின் மூலம் செப்டம்பர் 2013 முதல் நாளது தேதி வரை 14,306 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

v. த

ற்போது 6,424 அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது. இவர்கள் அனைவருக்கும் ஒரு அணிக்கு 450 நபர்கள் வீதம் வருடம் ஒன்றிற்கு 8 அணிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு, நிலுவை வெகுவாக குறைக்கப்பட்டுவிடும்.

vi. அமைச்சுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைப் பயிற்சியைத் தவிர துணை வட்டாட்சியர்களுக்கு விடுமுறை நாட்களை உள்ளடக்கிய 28 நாட்களுக்கு உள்ளிடப் பயிற்சி இந்நிலையத்தால் 1981–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இது வரை 138 அணிகளில் 3,173 துணை வட்டாட்சியர்கள் பயிற்றுவிக்கப் பட்டுள்ளார்கள். வணிக வரி அலுவலர்கள், தமிழ்நாடு மின்சார உற்பத்தி –

விநியோக வாரியத்தின் கணக்கு அலுவலர்கள், சத்துணவுப் பணியாளர்கள், ஊரக வளர்ச்சித் துறையின் அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோருக்கும் இந்நிலையத்தால் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2. புதிய கட்டடங்கள் கட்டுதல்**

இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்கான கட்டமைப்பை வலுப்படுத்தவும், நவீனப்படுத்தவும் அரசு ரூ.3,623.34 இலட்சம் வழங்கியது. மேலும், ரூ.220.84 இலட்சத்திற்கு திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது. இப்புதிய கட்டடம் நவீனமயமாக்கப்பட்ட உள்கட்டமைப்பு, பயிற்சியாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**6. ஆய்வுப் பிரிவு**

அரசு அலுவலகங்களில் நிருவாகத்தை செம்மைப்படுத்தவும், திறமையை மேம்படுத்தவும் மற்றும் நீண்டகால தாமதங்களைத் தவிர்க்கும் பொருட்டும், ஆய்வு மேற்கொள்ளும் திட்டம் 1959–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

துறைத் தலைமை அலுவலகங்கள், மாநகராட்சி அலுவலகங்கள், தலைமைச் செயலகத் துறைகள் உள்ளிட்ட 36 துறைத் தலைமை அலுவலகங்களில், ஒவ்வோர் ஆண்டிலும் தயாரிக்கப்படும் ஆய்வுத் திட்ட நிகழ்ச்சி நிரல்களின்படி ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஆய்வுக்குப் பின்னர் முதனிலை ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு, உரிய துறைத் தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகிறது. முதனிலை ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகளைக் களைந்து, குறைகளைவு

அறிக்கையை அத்துறைகள் அரசுக்கு அனுப்புகின்றன. அரசினால் நியமிக்கப்படும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களால் இறுதி ஆய்வு செய்யப்படுகின்றன. இறுதி ஆய்வு அலுவலர்கள் ஆய்வு மற்றும் பொதுக் குறிப்புகளை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் தீர்வு காண்பதற்காக இறுதி ஆய்வை மேற்கொண்ட பின்னர் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

மாவட்ட நிருவாகத்தின் திறனை மேம்படுத்தும் வகையில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் ஆய்வுப் பிரிவின் அலுவலர்கள், பதினோரு **(11)** மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு இரண்டு நாட்களுக்கான ஒழுங்கு நடவடிக்கை குறித்த 'முன்னோடி பயிற்சி' மற்றும் கண்காணிப்பாளர், மேலாளர் நிலையில் உள்ள

பணியாளர்களுக்கு அலுவலக நடைமுறைகள் குறித்த மூன்று நாட்களுக்கான ‘குறுகியகால பயிற்சி’ ஆகியவற்றை நடத்துகின்றனர். இப்பயிற்சி வகுப்புகள் ஒவ்வோராண்டும் மாவட்ட ஆட்சியரகங்களில் நடத்தப்படுகின்றன. **2015–2016**–ஆம் ஆண்டில் **30** முன்னோடி பயிற்சிகளும் **30** குறுகிய கால பயிற்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

**அ. மாவட்ட ஆய்வுக்குழுக்கள்**

மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களின் நிருவாகத் திறமையை மேம்படுத்துவதற்கும், சார்நிலை அலுவலகங்களின் பணியை நெறிப்படுத்துவதற்கும் மாவட்ட ஆய்வுக்குழுக்கள் **1975**–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன. பதினோரு மாவட்ட ஆய்வுக்குழுக்கள் தற்போது உள்ளன.

இக்குழுக்கள் துணை ஆட்சியர் நிலையிலான ஆய்வுக்குழு அலுவலர்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

மாவட்ட ஆய்வுக்குழுக்கள் மாவட்ட அளவிலான அலுவலகங்களில் விரிவான ஆண்டு ஆய்வு மற்றும் திடீர் ஆய்வுகளை மேற்கொள்கின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் மாவட்ட அலுவலகங்களில் 12 விரிவான ஆண்டு ஆய்வுகளையும், 240 திடீர் ஆய்வுகளையும் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. காலமுறையில் மாவட்ட ஆய்வுக்குழுக்களின் மாதாந்திர பணி திறனாய்வு செய்யப்பட்டு அவற்றின் மீதான குறிப்புரை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும், அவற்றின் நகல் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பப்படுகின்றன. மாவட்ட ஆய்வுக் குழுக்களானது மாவட்ட விழிப்புப் பணி மற்றும்

ஊழல் தடுப்பு பிரிவுகள் மேற்கொள்ளும் திடீர் ஆய்வுகளுக்கு உறுதுணையாக செயல்படுகின்றன. 2016–ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முன்னிலையில் விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்புக் குழு அலுவலர்களுடன் இணைந்து 107 ஒருங்கிணைந்த கூட்டங்கள் மாவட்ட ஆய்வுக்குழுக்களால் நடத்தப்பட்டுள்ளன.

**ஆ. புத்தாக்கப் பயிற்சி**

அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் உள்ள இளநிலை உதவியாளர்கள்/ உதவியாளர்களுக்கு ஐந்து நாட்கள் கொண்ட புத்தாக்கப் பயிற்சி ஆண்டுதோறும் ரூ.10.40 லட்சம் செலவில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகிறது.

## 7. அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு

அரசின் நடைமுறையிலுள்ள செயல்பாடுகளை மாற்றி அமைப்பதன் மூலம் பணியாளர்களின் அமைப்பு முறையை ஒழுங்குபடுத்துவதற்கு, அரசு 01.08.1970 அன்று, நிதித்துறையில், அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு ஒன்றை உருவாக்கியது. அதன் பிறகு அரசு, மைய அரசின் நிலையை பின்பற்றி, 01.10.1979 அன்று இக்குழுவை நிதித் துறையிலிருந்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கு மாற்றியது.

அரசின் பல்வேறு துறைகளிலுள்ள வழி முறைகளையும், நடைமுறைகளையும் எளிதாக்கவும், பணிக்கேற்ப பணியாளர்களின் தேவையைக் கணித்து அறியவும், அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவும், ஆவணங்களை சிறந்த முறையில்

பராமரிக்கவும், சிக்கன நடவடிக்கை மற்றும் செயல்திறனை மேம்படுத்தவும், தேவையான நுண்ணாய்வை மேற்கொள்ளவேண்டி, அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு உருவாக்கப்பட்டது.

மேற்படி குழு, அரசு துறைகளில் நுண்ணாய்வை மேற்கொள்வதற்காக, அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு வல்லுநர் தலைமையில், ஒரு குழுவுக்கு இரண்டு ஆராய்ச்சி அலுவலர்கள் வீதம் இரண்டு நிருவாகக் குழுக்களையும், வரவு–செலவு கணக்கு உட்பட அக்குழுக்களுக்கான அலுவலக நடைமுறைகளை மேற்கொள்ள, அரசு துணைச் செயலாளர் (அமைப்பு மற்றும் செயல்முறை) தலைமையில், ஒரு ஆராய்ச்சி அலுவலர், ஒரு உதவி பிரிவு அலுவலரைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றையும் உள்ளடக்கியது. அரசு துணைச் செயலாளர் (அமைப்பு மற்றும் செயல்முறை) அவர்கள், இரண்டு நிருவாகக்

குழுக்கள் மற்றும் கண்காணிப்புக்குழுவுக்கு ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுகிறார்.

இக்குழு இதுவரை 233 நுண்ணாய்வுகளை மேற்கொண்டுள்ளது. திருச்சியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவளிக்கும் தொழில்நுட்ப நிறுவனத்திலும், சென்னையில் உள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலகத்திலும் இக்குழு தனது நுண்ணாய்வை அண்மையில் மேற்கொண்டு நிறைவு செய்துள்ளது.

**8. 2016–2017–ஆம் ஆண்டிற்கான மாநில புதுமை நிதி திட்டங்கள்**

**2016–2017–ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.1,01,67,000/– மதிப்பீட்டில், பின்வரும் மாநில புதுமை நிதி திட்டங்களை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது :–**

**1 தமிழ்நாடு தகவல் ஆணையம்**

மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.30,64,000/– மாநில தகவல் ஆணையத்திற்கு, மேல் முறையீட்டு மனுக்களை இணைய வழி அனுப்பும் முறையினை அறிமுகப்படுத்துதல்

**2 விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகம்**

மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.71,03,000/– விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்பு இயக்குநரகத்தின் தலைமையிடம் மற்றும் அதன் பிரிவு அலுவலகங்களை

கணினிமயமாக்குதல்

## 9. முடிவுரை

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, செவ்வனே திட்டமிட்டு பல்வேறு வகைகளில் அரசு அலுவலர்களுடைய ஆற்றலை வலுப்படுத்துவதன் மூலம் அரசு சீராக இயங்குவதற்கு செம்மையாகப் பணியாற்றி வருகிறது. அரசு அலுவலர்கள் தங்கள் திறனால், திடமான நம்பிக்கையுடனும், பணி அனுபவத்தின் மூலமாகவும் அவர்கள் முன் வைக்கப்படும் சவால்களையும், கடினமான பணிகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்கிறார்கள். உயர்ந்த குறியீடுகளை நிர்ணயித்து பணியாளர்கள் அதை அடைவதற்கு இத்துறை உதவுகின்றது.

**ஓ. பன்னீர்செல்வம்,**
**நிதி, பணியாளர் மற்றும்**
**நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்**